25 JUN 2018

21 JUN 2019

16135

கருக்கம்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் – உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை மாவட்டத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் – காஞ்சிபுரம், திருவள்ளூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மனைகள் ஒதுக்கீடு – கிரயப்பத்திரம் வழங்கும் பொருட்டு ஆட்சேபணை உள்ள மற்றும் ஆட்சேபணையற்ற நிலங்கள் – நில உரிமை மாற்றம் செய்ய செயலாக்கக் குழு (Empowered Committee) அமைத்து – ஆணை வெளியிடப்படுகிறது.

= = = =

2. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் மேலும், மேற்குறிப்பிட்ட திட்டப்பகுதிகளில் அரசு வருவாய்த்துறை, மாவட்டம் வாரியாக நில உரிமை மாற்றம் செய்யப்பட வேண்டிய நிலங்கள் தவிர நில உரிமை மாற்றம் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:-

i. தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நிலமான திருவான்மியூர் கிராமம், புல எண்.51/1 பகுதி, 33 கிரவுண்ட், 2357 சதுரடி நிலத்திற்கு நிலக்கிரயத் தொகை மனை ஒன்றுக்கு ரூ.18,232/-வீதம் ரூ.6,18,802/- 06.03.2014ல் வீட்டு வசதி வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. வட்டித் தொகை 1988 முதல் 2012 வரையிலான காலத்திற்கு ரூ.21,68,894/- செலுத்துவதிலிருந்து விலக்களித்து நிலத்தினை வாரியத்திற்கு நிலமாற்றம் செய்ய தடையின்மைச் சான்று வழங்க வீட்டு வசதி வாரியத்திடம் செயலாக்கக்குழு (Empowered Committee) மூலம் கோரலாம். இது குறித்து 16.03.2018 அன்று முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய முதன்மைச் செயலாளர்/மேலாண்மை இயக்குநர் (முழு கூடுதல் பொறுப்பு) மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநர் கலந்து கொண்ட கூட்டுக் கூட்டத்தில் (Joint Meeting) மேற்கண்ட வட்டித்தொகை ரூ.21,68,894/-ஐ தள்ளுபடி செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ii. இந்து சமய அறநிலையத்துறையில் 10 திட்டப்பகுதி நிலங்களுக்கு அசல் நிலக்கிரயத் தொகையுடன், திட்டம் துவங்கப்பட்ட காலத்திலிருந்து தொகை செலுத்தும் வரை உள்ள காலம் வரை வட்டி 10% செலுத்த கோரப்பட்டுள்ளது. அசல் நிலக்கிரயத் தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு நிலத்தினை வாரியத்திற்கு பத்திரப்பதிவு செய்து கொடுக்க இந்து சமய அறநிலையத்துறையிடம் வலியுறுத்தலாம்.

iii ரயில்வே துறைக்குச் சொந்தமான நிலங்களில் 8 திட்டப்பகுதிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது என்றும். இத்திட்டப்பகுதிகளின் நிலங்களை வாரியத்திற்கு நில மாற்றம் செய்ய ரயில்வே துறை சந்தை மதிப்பு விலையில் நிலக்கிரயம் செலுத்த கோரியுள்ளது எனவும், இத்திட்டப்பகுதிகளில் ஏழை – எளிய மக்களுக்கு குறைந்த விலையில் மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதாலும், பர்மா அகதிகள் வசித்து வருவதாலும் நிலத்தினை நிலக்கிரயமின்றி வாரியத்திற்கு மாற்றம் செய்துதர ரயில்வே துறையை செயலாக்கக் குழு மூலம் கோரலாம்.

iv இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்திற்குச் (I.I.T) சொந்தமான புல எண்.13/2, கானகம் கிராமத்தில் 70 Cent or 12 Grounds, 1692 சதுரடி விஸ்தீரணத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டத்தின்கீழ் திட்டம் செயல்படுத்தப்பட்ட 100 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிலத்தினை மாற்றம் செய்ய இந்திய தொழில் நுட்ப நிறுவனத்திடம் கோரியதில் கிரவுண்டு 1க்கு ரூ.5,000/- வீதம் ரூ.63,525/-ஐ இழப்பீட்டுத் தொகையாக வழங்க இந்நிறுவனம் கோரியது. மேலும், நில மாற்றம் செய்ய மேதகு இந்திய குடியரசுத்தலைவர் அவர்கள் அனுமதி வழங்கிய பின்னரே நிலமாற்றம் செய்வது குறித்து மேல் நடவடிக்கை தொடர இயலும் என்றும், 05.09.17ல் நில மாற்றம் குறித்து மனித வள மேம்பாட்டுத் துறைக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளதாகவும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே, கானகம் திட்டப்பகுதிக்கு ரூ.63,525/-ஐ இந்திய தொழில் நுட்ப நிறுவனத்திற்கு செலுத்தி, நிலத்தினை வாரியத்திற்கு மாற்றம் செய்து தர செயலாக்கக்குழு மூலம் இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டுத் துறையிடம் கோரலாம்.

Scanned with CamScanner

3. எனவே, தலைமைச் செயலாளர் தலைமையில் 24.01.2018 அன்று நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுத்தவாறு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட 'செயலாக்கக்குழு' (Empowered Committee) ஒன்று அமைத்திட தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை.
2. கூடுதல் தலைமைச் செயலாளர் /நில நிர்வாக ஆணையர்.
3. அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.
4. அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை.
5. அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை.
6. முதன்மைச் செயலாளர் /மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.

4. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர்/ மேலாண்மை இயக்குநரின் மேற்கண்ட கருத்துருவை அரசு கவனமாகப் பரிசீலித்தது. பரிசீலனைக்குப் பின், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் உலக வங்கி நிதியுதவியுடன் சென்னை மாவட்டத்தில் சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் மற்றும் காஞ்சிபுரம், திருவள்ளூர், மதுரை, சேலம், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், வேலூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித்திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் மனைகள் ஒதுக்கீடு பெற்று, பயனடைந்த மக்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கும் பொருட்டு ஆட்சேபனை உள்ள மற்றும் ஆட்சேபணையற்ற நிலங்கள் அனைத்திற்கும் ஒரே அரசாணையில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில் கீழ்க்காணும் செயலாக்கக் குழு (Empowered Committee) ஒன்றை அமைத்து அரசு ஆணையிடுகிறது -

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை	–	உறுப்பினர்
கூடுதல் தலைமைச் செயலாளர் /நில நிர்வாக ஆணையர்	–	உறுப்பினர்
அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை	–	உறுப்பினர்
அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை	–	உறுப்பினர்
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை	–	உறுப்பினர்
முதன்மைச் செயலாளர் /மேலாண்மை இயக்குநர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்.	–	கூட்டுநர்

5. இதே குழு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு மாற்றவுள்ள நிலங்கள் சம்மந்தமான பிரச்சினைகளையும் ஆராய பணிக்கப்படுகிறது.

...4...

Scanned with CamScanner

6. மேற்கண்டுள்ள ஆணையின்படி தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் (FAC) அறிவுறுத்தப்படுகின்றனர்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ச.கிருஷ்ணன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அரசு தலைமைச் செயலாளர், சென்னை-9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, சென்னை-9
கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-5
அரசு முதன்மைச் செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை.
சென்னை – 9
அரசு முதன்மைச் செயலாளர், பொதுப்பணித்துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை, சென்னை – 9
முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், சென்னை – 5
முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் (FAC).
தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், சென்னை–35.
நகல்
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்(நிதி) அவர்களின் தனிச்செயலர்,
சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர்,
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை – 9
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
பொதுப்பணித் துறை, சென்னை –9.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, சென்னை – 9.
வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (அநமு/வ.செ.)த்துறை,
சென்னை –9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர் 15/6/1

Scanned with CamScanner